**உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள்**

**முன்னிலை – திரு ரா.நாகேஸ்வரன் பி.இ.,**

ந.க.எண்.714/2016/திஉ திகு–2

நாள் 30/5/2016.

பொருள் கட்டிடம்–திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி–திருச்சிராப்பள்ளி மாநகராட்சி–அரியமங்கலம் கோட்டம் மற்றும் கிராமம்–புதிய வார்டு ஏடி–பிளாக் எண்.7–ந.அ.எண்.111 முதல் 123 வரை சங்கிலியாண்டபுரம் மெயின் ரோட்டினை ஒட்டி அமைந்துள்ள 9821 சமீ பரப்பளவு உள்ள மனைக்கு ஒப்புதலும் மற்றும் ஸ்டில்ட் தளம் 4 தளங்கள் கொண்ட பிளாக் ஏ, பி,சி–ல் மொத்தம் 196 குடியிருப்புகள் கொண்ட தொகுப்பு கட்டிடம் கட்ட இசைவு அளிக்கப்பட்டது–திட்ட அனுமதி அளிக்கப்பட்டது–திட்ட அனுமதி கால நீட்டிப்பு அளித்து உத்தரவு வழங்குதல்–தொடர்பாக.

பார்வை
1. மனுதாரர் திரு எம்.ஆனந்த் என்பவரது விண்ணப்பம் நாள் 26.4.16 மற்றும் 13.5.16.
2. ஆணையர்,திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.எப்1/5836/2011 அரிய (மையம்) நாள் 27.6.2012
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணைக் கடிதம் ந.க.எண்.16000/12 சிபி நாள் 2.12.2012.
4. உறுப்பினர் செயலர் திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் செயலாணைக் கடிதம் ந.க.எண்.1046/12 திஉதிகு 2 நாள் 21.6.2013.

------

**உத்தரவு**

திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டப் பகுதி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, அரியமங்கலம் கோட்டம் மற்றும் கிராமம், புதிய வார்டு ஏடி, பிளாக் எண்.7, ந.அ.எண்.111 முதல் 123 வரை சங்கிலியாண்டபுரம் மெயின் ரோட்டினை ஒட்டி அமைந்துள்ள 9821 சமீ பரப்பளவு கொண்ட மனைக்கு 1 to 19 என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

| S.No. | Description | Block A | | | Block B | | | Block C | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | FSI sq.mt | Non FSI sq.mt | No.of units | FSI sq.mt | Non FSI sq.mt | No.of units | FSI sq.mt | Non FSI sq.mt | No.of units |
| 1. | Stilt Floor area | -- | 1639.16 | Parking | -- | 1356.65 | Parking | -- | 1638.89 | Parking |
| 2. | First Floor area | 1522.12 | 6.12. | 18. | 1284.12 | 5.30 | 14 | 1531.71 | 6.22 | 17 |
| 3. | Second Floor area | 1522.12 | 6.12. | 18. | 1284.12 | 5.30 | 14 | 1531.71 | 6.22 | 17 |

315

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | Third floor area | 1522.12 | 6.12. | 18. | 1284.12 | 5.30 | 14 | 1531.71 | 6.22 | 17 |
| 5 | Fourth Floor area | 1522.12 | 6.12. | 18. | 1284.12 | 5.30 | 14 | 1531.71 | 6.22 | 17 |
| 6 | Head Room area | -- | 57.04 | -- | -- | 56.26 | -- | -- | 60.92 | -- |
| | Total | 6088.48 | 1720.68 | 72 | 5136.48 | 1434.11 | 56 | 6126.84 | 1724.69 | 68 |

Total No.of dwellings = 196 dwelling units

C.S.R = 985.20 sq.m

மேற்கண்ட உத்தேச தொகுப்பு குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல் சிறப்பு நிபந்தனைகள்/நிபந்தனைகளுடன்திட்ட அனுமதி வழங்க பார்வை 3ல் கண்ட நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் செயலாணையில் இசைவு அளித்து உத்தரவு பெறப்பட்டுள்ளது. மேலும் ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ எண்.269/2012 என எண்ணிடப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து பார்வை 4ல் கண்ட உறுப்பினர் செயலர். திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் செயலாணையில் மேற்படி உத்தேசத்திற்கு திட்ட அனுமதி எண்.46/2013 என எண்ணிடப்பட்டு சிறப்பு நிபந்தனைகள்/ நிபந்தனைகளுடன்திட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

பார்வை 1ல் கண்ட மனுதாரர் கடிதத்தில் மேற்படி உத்தேசத்தில் பிளாக்–சி மட்டும் கட்டி முடிக்கப்பட்டுள்ளது எனவும் மீதமுள்ள பிளாக்–A மற்றும் B கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பதால் திட்ட அனுமதி காலம் 20.6.2016 உடன் முடிவடைய உள்ளதால் திட்ட அனுமதி காலத்தினை நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்குமாறு கோரியுள்ளார்.

எனவே மேற்படி உத்தேசத்தில் கட்டப்பட வேண்டி பிளாக்–A மற்றும் பிளாக்–B ஆகியவற்றிற்கு பார்வை 4ல் கண்ட உறுப்பினர் செயலர். திருச்சி செயலாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள சிறப்பு நிபந்தனைகள்/ நிபந்தனைகளுடன் திட்ட அனுமதி காலத்தினை 21.6.2016 முதல் 20.6.2019 மூன்று ஆண்டுகளுக்கு காலநீட்டிப்பு அளித்து உத்தரவு அளிக்கப்படுகிறது.

உறுப்பினர் செயலர். 30/5/16

30.5.16

பெறுநர்.

திரு எம்.ஆனந்த்,
C.11, முதல்தளம்,
3வது கிராஸ், மேற்குவிஸ்தரிப்பு,
தில்லைநகர், திருச்சி–18.

நகல்.

ஆணையர்,
திருச்சி மாநகராட்சி.

353

**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டுக்குழு அலுவலகம் –II உதவி ஆணையரின் செயல்முறைகள்.**

**பிறப்பிப்பவர். அ. அக்பர் அலி,M.Sc.,B.Ed.,PGDCA.,**

ந.க.எண்.5836 /2011/எப்1 (அரிய) நாள்.28.04.2023

**கட்டட அனுமதி**

பொருள் கட்டட அனுமதி காலநீட்டிப்பு– திருச்சிராப்பள்ளி மாநகராட்சி– வார்டுக்குழு அலுவலகம்–II – (வார்டு எண் 34 ) செங்குளம் கிராமம் – சங்கிலியாண்டபுரம் மெயின்ரோட்டில் சர்வே வார்டு AD, பிளாக் 35, TS.No 111 முதல் 123 வரை உள்ள 9821 ச.மீ இடத்தில் 4 தளங்களில் ABC என்ற 3 பிளாக்குகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டது–அதில் C&B ல் 2 பிளாக்குகள் கட்டி முடிக்கப்பட்டது– A பிளாக்கு கட்ட வழங்கப்பட்ட கட்டட அனுமதியினை கால நீடிப்பு செய்து உத்தரவு பிறப்பித்தல்–தொடர்பாக.

பார்வை
1) உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமத்தின் நடவடிக்கைகள் ந.க.எண்.1046/2012/திஉதிகு–2 நாள் 21.6.2013
2) உறுப்பினர் செயலர், திருச்சிராப்பள்ளி உள்ளூர் திட்டக் குழுமத்தின் நடவடிக்கைகள் ந.க.எண்.714/2016/திஉதிகு–2 நாள் 30.05.2013
3) உதவி ஆணையர் , அரியமங்கலம் கோட்டம் , திருச்சிராப்பள்ளி மாநகராட்சி செயல்முறைகள் ந.க.எண்.5836/2011/எப்1(அரிய) நாள்5.07.2013
4) உதவி ஆணையர் , அரியமங்கலம் கோட்டம் , திருச்சிராப்பள்ளி மாநகராட்சி செயல்முறைகள் ந.க.எண்.5836/2011/எப்1(அரிய) நாள்.18.07.2016
5) அரசாணை(நிலை) எண்.260 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 16.12.2022
6) மனுதாரர் திரு.எம்.ஆனந்த் என்பவரின் விண்ணப்பம் நாள்.24.01.2023
7) ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி அவர்களின் அனுமதி நாள் 17.04.2023

********

**உத்தரவு**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி , வார்டுக்குழு அலுவலகம், வார்டு எண்.34க்குட்பட்ட சங்கிலியாண்டபுரம் மெயின் ரோட்டில் (செங்குளம் கிராமம்) சர்வே வார்டு AD, பிளாக் 35, TS.No111 முதல் 123 வரை எண்ணில் 9821 ச.மீ இடத்தில் 4 தளங்களில் A,B,C என்ற 3 பிளாக்குகளாக கட்டடம் கட்ட பார்வை3ல் காணும் செயல்முறைகளின்படி கட்டட அனுமதி (5.07.2013 முதல் 04.07.2016)வழங்கப்பட்டது. அதில் C பிளாக் மட்டும் கட்டப்பட்ட நிலையில் மீண்டும் காலநீட்டிப்பு செய்து பார்வை4ல் காணும் செயல்முறைகளின்படி உத்தரவு (21.06.2016 முதல் 20.06.2019) பெறப்பட்டு B பிளாக் கட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் பார்வை5ல் காணும் அரசாணை நிலை எண்.260, நாள். 18.07.2022ன்படியும், பார்வை7ல் காணும் ஆணையரின் அனுமதி நாள்17.04.2023ன் படியும் மனுதாரர் மேற்படி சர்வே வார்டு AD, பிளாக் 35, TS.No111 முதல் 123 வரை எண்ணில் 9821 ச.மீ இடத்தில் A பிளாக் கட்டிடத்தை கட்ட 28.04.2023 முதல் 27.04.2025 தேதி முடிய 2 வருட காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. கட்டடத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாககம் நிறுத்தும் இடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேணடும்
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அவ்வாறே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழை நீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138, நககாட்சி நிர்வாகம் ம்ற்றும் குடிநீர் வழுங்கள் துறை நாள் 11.10.2002ன் படி கட்டடத்தி. கூசயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், கடைகள் மற்றும் குடியிருப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் ஆகியவை மனதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்பட வேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விகிதப்படி தேவையான அளவுக்கு தீத்தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.
9. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழுங்கல் (ந.நி.1) துறை நாள் 3.11.2004ன்படி செப்டிக் டேங்கில் "U" ட்ரேப் அமைத்தல் வேண்டும்.
10. சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அறிக்கையின்படி உத்தேச கட்டடத்திற்கு Fly ash bricks மற்றும் Materials பயன்பபத்தப்பட வேண்டும்.
11. இணைப்பில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் யாவும் பொருந்தும்.
12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் இவ்வாணையின் நகலும் ஒவ்வொரு வீட்டையும் வாங்வோருக்கு வழங்கப்பட வேண்டும்.

உதவி ஆணையர்
வார்டுக்குழு அலுவலகம்–II
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி.

28/4/2023

பெறுநர்
திரு.எம்.ஆனந்த்,
C.11, முதல் தளம்,
3வது கிராஸ், மேற்கு விஸ்தரிப்பு,